ஆகவே போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. குறை இருந்தால் எங்களுக்குத் தெரியும். உடனடியாகத் தகவல் வரும். ஆனால் வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் சத்துணவுப் போடப்படுகிறது. அங்கே வருகின்ற குழந்தைகளுக்குப் போடப்படுகிறது என்பதை திரு. ஞானசேரகரன் அவர்கள் ஊருக்குப்போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேதாரண்யம் வட்டத்தில் சில பகுதிகளில் வைரஸ் நோயினால் இறால் பண்ணை இறால் குஞ்சுகள் அழிவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி. கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தோப்புத்துறை, பெரியகுந்தகை, அவறிக்காடு, கோடியக்கரை போன்ற பகுதிகளில் இறால் பண்ணைகளில் வைரஸ் நோயினால் இறால் குஞ்சுகள் அழிவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீனளத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மற்றும் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள கடலோர இறால் பண்ணைகள்தான் முதன் முறையாக 1994 நவம்பரில் வைரஸ் நோய் பாதிப்பிற்கு உள்ளானதாக தெரியவந்தது. தமிழ்நாட்டில், சமீபகாலமாக 1995-ம் ஆண்டு ஜனவரி முதல் நாகப்பட்டினம்–காயிதே மில்லத், தென்னாற்காடு மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் உள்ள கடலோர இறால் பண்ணைகள் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கடந்த 1994-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் மத்திய அரசின் உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (Central Institute of Brackishwater Aquaculture) நடத்திய கருத்தரங்கு (Workshop Oct'94) மற்றும் 1995-ஆம் ஆண்டு

ஜனவரி திங்களில் மத்திய கடல்பொருள் ஏற்றுமதி வாணிப ஆணையகம் (Marine Products Export Development Authority) ஆகியவை ஏற்பாடு செய்திருந்த "INDAQUA-95"-பொருட்காட்சி கருத்தரங்குகளில் இறால் பண்ணைகளுக்கு வைரஸ் நோய் ஏற்படுத்தும் பாதிப்பு குறித்து வெகுவாக விவாதிக்கப்பட்டது. மேற்படி, கருத்தரங்கில், இந்த நோய் ஒரு புதுவகை வைரஸ் நோய் என கூறப்பட்டது. 1993-ம் ஆண்டில் சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் இந்த நோய் பரவி இறால் உற்பத்தியை பாதித்தது என்றும், இந்த வைரஸ் நோய்க்கான முக்கிய காரணங்களாக கருதப்படுபவை பருவ மழையினால் நீரின் வெப்பநிலை மற்றும் உப்புத்தன்மை திடீரென குறைவதால் பண்ணைகளில் இருப்பு செய்யப்பட்டுள்ள இறால் குஞ்சுகளுக்கு (Stress) பாதிப்பு ஏற்படும் என்றும், இந்த நோய் தாக்கத் தொடங்கியுள்ளதற்கு அறிகுறி இறால்களின் மேல்பகுதியில் வெள்ளைப்புள்ளி (White Spot) தெரியவரும். இந்நிலையில் இறால்கள் அறுவடை செய்யக்கூடிய அளவினை அடையாவிட்டாலும் கூட உடனடியாக, அறுவடை மேற்கொள்ளுவது ஓரளவு, இழப்பினை குறைக்க உதவும். இறால் பண்ணைகள் முற்றிலும் வைரஸ் நோயால் பாதிப்புக்குள்ளாகி இருப்பின், அனைத்து குளங்களிலுமுள்ள நீரினை உடனடியாக வெளியேற்ற வேண்டும். நீர் முற்றிலுமாக வெளியேற்றப்பட்ட பின்னர் குளங்கள் சுத்தமாக உலர வைக்க வேண்டும். உடனடியாக பண்ணையை அடுத்த மகசூலுக்கு (Culture) தயார்படுத்த தேவையான செய்நேர்த்தி பணிகளை மேற்கொள்ளாமல் சுமார் 4 முதல் 5 மாதங்கள் மகசூல் விடுமுறை (Crop Holiday) காலமாக கணக்கில் கொண்டு சுண்ணாம்பு இடுதல் வேண்டும். குளத்தின் அடிப்பகுதி மண்ணை வெளியில் எடுத்துப் போட்டு உலர வைக்க வேண்டும். இவற்றின் மூலம் இறால் பண்ணைகளில் வைரஸ் நோய் தொடர்ந்து தாக்குவதை கணிசமாக குறைக்க இயலும். நீண்ட கால பாதிப்பினை தடுக்க crop holiday எனப்படும் மகசூல் விடுமுறைக்காலம் அத்தியாவசியமான ஒன்று என கடல் பொருள் ஏற்றுமதி வாணிப ஆணையகம் பரிந்துரைத்துள்ளது. மேற்படி பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பின்னர், இருப்பு செய்யப்படும் இறால் குஞ்சுகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதன் மூலமும் (Low profile stocking) வைரஸ் நோய் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள இயலும். இந்த வைரஸ் நோய் எல்லாவகை இறால் பண்ணைகளையும் தாக்கியுள்ளதாகத் தகவல் உள்ளது. ஆனால் இறால் பண்ணைகளில் ஏற்படும் வைரஸ் நோயை அடியோடு ஒழுக்க வழிமுறைகள் கிடையாது. எனினும், 4 முதல் 5 மாதங்கள் இறால் பண்ணைகளுக்கு மகசூல் விடுமுறை தந்து சுண்ணாம்பு இட்டு சூரிய ஒளியில் காய வைப்பதன் மூலம் இந்த வைரஸ் நோய் மீண்டும் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்ளலாம்.

முற்பகல் 11.35

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்வாகல்ச்சர் எனப்படும் இறால் பண்ணைகளில் ஒவ்வொரு பாத்திக்கும் இடையே குறிப்பிட்ட இடைவெளி இருக்க வேண்டும். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கு இணங்க பேராசையினால் அதி தீவிர வளர்ப்பு முறையில் அடர்த்தியை அதிகப்படுத்தி வளர்ப்பு முறையை தீவிரப்படுத்தும் பொழுது, 'எல்லோ ஃபீவர்' எனப்படும் மஞ்சள் காய்ச்சல் வியாதி உள்பட பல்வேறு நச்சுக் கிருமிகள் உற்பத்தியாகி இறால் குஞ்சுகளை மரணப் பள்ளத்தாக்கில் தள்ளி விடுகின்றன. ஜப்பான், சீனா நாடுகளில் மட்டும் அல்ல தைவான், பிலிப்பைன்ஸ், வங்கதேசம், தாய்லாந்து போன்ற நாடுகளிலும் இறால் பண்ணைகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இன்றைய தினம் உலகிலேயே அக்வாஃபாம் வளர்ப்பு டெக்னாலஜியில் முன்னணியில் தலைசிறந்து விளங்கும் பிரான்ஸ் நாட்டில் உள்ள நிபுணர்கள்தான் வல்லுநர்களாக விளங்குகிறார்கள். ஆகவே, இறால் பண்ணைகளைத் தாக்கும் வைரஸ் நோய் பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொள்ள பிரான்ஸ் நாட்டிலிருந்து நோய் ஆய்வு நிபுணர்களைத் தமிழகத்திற்கு வரவழைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மற்றும் கிருஷ்ணா மாவட்டங்களில் 1994-ஆம் ஆண்டு இறாலுக்கு வைரஸ் என்னும் கொடிய நோய் தாக்கப்பட்டது. அப்படித் தாக்கப்பட்ட வைரஸ் என்னும் கொடிய நோய் நம்முடைய தமிழகத்தில் நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தென்னாற்காடு மற்றும் வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களிலுள்ள இறால்களைத் தாக்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாகி, அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், பொதுவாக இந்த நோய் எப்படி ஏற்படுகின்றது என்றால், பருவ மழை அதிகமாகப் பெய்கின்றபோது உப்புத்தன்மை குறைகின்ற காரணத்தினால் இந்த நோய் ஏற்பட்டு, வளர்க்கப்படும் இறால்களின் மேலே ஒரு வெள்ளைப் புள்ளி, அதாவது ஒயிட் பாயிண்ட், ஒயிட் ஸ்பார்க் ஏற்படுவதன் காரணமாக, இந்த நோய்க்கு அந்த இறால்கள் ஆட்படுவதன் காரணமாக இது தொடராமல் இருக்க வேண்டுமென்றால், Crop Holiday period என்று சொல்லக்கூடிய ஏறக்குறைய அறுவடை செய்த காலத்திலிருந்து 4 மாதகாலத்திற்கு பண்ணையிலிருந்து முற்றிலுமாக தண்ணீரை வெளியேற்றிவிட்டு அதிலே சுண்ணாம்பைப் போட்டு காய வைத்தால் எதிர்காலத்திலே அந்த அளவுக்கு வைரஸ் நோய் தாக்கப்படாத ஒரு சூழ்நிலை உருவாகும். ஏற்கெனவே நம்முடைய

மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் இதற்காக பிரான்சிலிருந்து அறிஞர் குழுவை வரவழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அது போன்ற அவசியம் இல்லை. 'Marine Products Export Development Authority' ஒரு ஆராய்ச்சியை மெற்கொண்டு வருகிறது. விரைவிலேயே இதற்கு அந்த 'Marine Products Export Development Authority' தீர்வு காண்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று நெல்லூரிலுள்ள Research Centre-இல் கூட இறால் பண்ணைகளைத் தாக்கும் நோய்களைப் பற்றி முழுமையாகக் கண்டறிய முடியவில்லை. தமிழகத்திலுள்ள தூத்துக்குடியில் மீன்வள கல்லூரியில் இறால் குஞ்சுகளின் நோய் பற்றிய ஆய்வு மேற்கொண்டாலும் அதில் முழுமையான ஆய்வு நடத்துவதற்கும் இறால் பண்ணைகள் அதிகமாக உள்ள பகுதியில் இறால் மீன் வளர்ப்பு குறித்த முழுமையான ரிசர்ச் சென்டர் ஆரம்பிப்பதற்கும், நோய் தடுப்பு குறித்து உயர்நிலை கண்காணிப்பு வல்லுநர்கள் குழு அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. 'Central Institute of Brackish Water Aquaculture' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. இந்த மாதிரியான வேலைகளையெல்லாம் இந்த நிறுவனம் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 153, 154 மற்றும் 155 ஆகிய மூன்று அறிக்கைகளை இக்குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.